**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.320/2013</u>** **தேதி.**08.01.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 08.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.கலாவதி |
| க/பெ. | திரு.வேலு |
| வயது | 73/2026 |

துவக்க நேரம் 1.20 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

1. தாவா சொத்து லட்சுமி அம்மாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் அவரது தாயார் வீட்டிலிருந்து வந்தது. நான் வழக்குரையில், கிரைய உடன்படிக்கையில் எதற்காக 3 ஆண்டுகள் காலத்திற்கு கிரையம் செய்ய கால அவகாசம் நிர்ணயித்ததாகவும், அந்த காலஅவகாசம் மேற்படி பிரதிவாதியானவர் தாவா சொத்தின் அசல் ஆவணத்தை தொலைத்துவிட்டதாகவும், அந்த ஆவணத்தை தேடி கண்டுபிடிக்க காலஅவகாசம் கேட்டதாகவும், அதனால் 3 ஆண்டுகள் நிர்ணயித்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. பிரதிவாதி, தாவா சொத்தின் அசல் ஆவணத்தை கிரைய உடன்படிக்கையின்போது என்னிடம் கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த அசல் பத்திரம் திருடுபோய்விட்டது. நானும், பிரதிவாதியும் சேர்ந்து கிரைய உடன்படிக்கையை 3 ஆண்டுகாலத்திற்கு ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் ஆமாம். இந்த 3 ஆண்டுகள் காலம் என்பது 14.11.2008 லிருந்து 3 ஆண்டுகள் காலகெடு என்றால் சரிதான்.

3. பிரதிவாதி லட்சுமி அம்மாளுக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 14.11.2008 ல் நான் பிரதிவாதியிடம் தாவா சொத்தை அடமானம் பெறுவதாக சொல்லிதான் கையெழுத்து பெற்றேன் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் உள்ள சாட்சிகள் மூவறையும் நான் இந்த வழக்கில் விசாரணை செய்ய உள்ளேனா என்றால் லட்சுமியின் கணவர் இறந்துவிட்டார். எனது கணவரும் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் சாட்சி சொல்ல வரமாட்டார். இந்த உடன்படிக்கை ஏற்பட்டு வெகுநாட்கள் ஆகிவிட்டதால் மோகன் என்பவர் யார் என்று அடையாளம் தெரியவில்லை.

4. நான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியதாக சொல்லும் காலகட்டத்தில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.5,00,000/- இருக்குமா என்றால் தெரியவில்லை. அப்பொழுது சொத்து மதிப்பு குறைவாக இருந்தது. தற்பொழுது சொத்து மதிப்பு அதிகமாக உள்ளது. நான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியதாக சொல்லும் சொத்தின் தற்பொழுது மதிப்பு எவ்வளவு என்றால் சரியாக தெரியாது. ஆனால், தற்பொழுது அதிகமாக சொத்து மதிப்பு உள்ளது.

5. தாவா சொத்து தற்பொழுது பிரதிவாதி லட்சுமி அம்மாளின் அனுபவத்தில் உள்ளது என்றால் நானும் அனுபவிக்கவில்லை, லட்சுமியும் அனுபவிக்கவில்லை. தற்பொழுதுவரை தாவா சொத்தை லட்சுமி அம்மாளள்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. யாரும் பயிர் செய்யவில்லை. கடந்த 14.11.2008 அன்று முதல் 3 ஆண்டுகளுக்குள் நீதிமன்றத்தை நாடி எந்தவித பரிகாரத்தையும் கோரவில்லை என்றால் பிரதிவாதி தலைமறைவாகிவிட்டார். பிரதிவாதி அதே ஊரில்தான் இருந்தார் என்றால் நான் வழக்கிற்காக, பிரதிவாதி தலைமறைவாகிவிட்டார் என்று நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள தாவா கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை 3 ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லட்சுமி அம்மாள் மாடுகளை ஓட்டிக்கொண்டு ஊரைவிட்டு சென்றுவிட்டார். தாவா சொத்தின் மதிப்பு தற்பொழுது

அதிகமாகிவிட்டதால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. கிரைய உடன்படிக்கையில், கிரையத்திற்கான காலத்தை நீட்டிக்கசெய்ய எந்தவித மேலொப்பமும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான், பிரதிவாதிக்கு அடமான பத்திரம் எழுதிகொடுப்பதாக சொல்லிவிட்டு, கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ஊரில் பணத்தை வட்டிக்குவிடும் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது கிராமத்தில் உள்ள நபர்களை விசாரித்தால் நான் வட்டிக்குவிடும் தொழில் தெரியவரும் என்றால் வந்து விசாரித்துக்கொள்ளுங்கள். நான் இந்த வழக்கை 3 ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் மறு விசாரணைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, வேண்டுகோள் ஏற்கப்பட்டு மறுவிசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது.

வாதி தரப்பில் மறு விசாரணை:–

1. நான் இந்த வழக்கில், உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள சாட்சிகளை விசாரிக்க உள்ளேன் என்றால் இல்லை.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 1.55 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.

OS.NO.320/2013